Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் .**

**திருவெண்ணெய்நல்லூர்.**

# CC.No. 59/2024

**2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 - வது நபரின் வாக்குமூலம் (1969-ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | மயக்க மருந்து நிபுணர் |
| பெயர் | - | ஆர்.சுஜீதா | வட்டம் | - | வேலூர் |
| க /பெ | - | சுந்தரவடிவேல்ராஜா | சமயம் | - | |
| கிராமம் | - | வேலூர் | வயது | - | 37 |
| சாதி | - | | | | |

| | |
|---|---|
| நாள் ( Dated) : 22.08.2025 | |
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | -திறந்த நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர். |
| இந்த வழக்கில் வழக்கறிஞர்கள் | அரசுக்காக – திரு. ஐ. பாரூக் ஷா, பி.ஏ., எல். எல்.எம்., அரசு உதவி வழக்கறிஞர், நிலை-2 |
| | எதிரிக்காக திரு. அ.அய்யப்பன், வழக்கறிஞர், |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE POINT)** | |
| இடம் ( Venue) | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, வேலூர் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | மயக்க மருந்து நிபுணர், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, வேலூர். |
| சாட்சி ( Witness) | அசா.4 |

சாட்சி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, வேலூரிலிருந்து நீதிமன்ற காணொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறார்.

**(எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மயக்க மருந்து நிபுணராக பணியில் இருந்து வருகிறேன். கடந்த 02.05.2016 ந் தேதி இரவு 07.40 மணியளவில் நான் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது அலமேலு க/பெ.சுந்தரம், 37 வயதுள்ளவர் ஞானவேல் என்பவரால் அழைத்து வரப்பட்டார். அடையாளம் தெரிந்த 2 நபர்கள் வீட்டிலும், கொல்லையிலும் வைத்து இரும்பு ராடால் மாலை 06.00 மணியளவில் அடித்ததாக என்னிடம் சொன்னார்.

2. நான் அவரை பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது.

1. இடது பக்கம் தலையில் 5x0.5x1 செ.மீ அளவில் வெட்டுக்காயம் இருந்தது.
2. இடது பக்கம் தலையின் பக்கத்தில் 4x0.5x0.5 செ.மீ அளவில் வெட்டுக்காயம் இருந்தது.
3. இடது பக்கம் தலையின் கீழ் பக்கத்தில் 4x0.5x0.5 செ.மீ அளவில் வெட்டுக்காயம் இருந்தது.

அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று அளித்தேன். **நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.2 ஆகும்**. இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**<u>மறு விசாரணை</u> - இல்லை.**

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.